ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4642

விளம்பர விகிதம்.
இஞ்ச் ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 27—8—44 | இதழ் 25.

## தமிழ்நாட்டில் ஆரிய ஆதிக்கமா?

தாஜுதீன்.

ஆம்! தமிழ் நாட்டில் ஆரிய ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது. தமிழர் நிலை தாழ்ந்து கிடக்கிறது. அந்நியநாட்டிலே தமிழர் அவமதிக்கப்படவில்லை. தனது தாய்நாட்டிலே தமிழர் நசுக்கப்பட்டுக், கீழ்சாதியினராய், தீண்டப்படாதவராய் நடத்தப்படுகின்றனர், உலகத்திலுள்ளமற்ற மக்களெல்லாம் சுதந்தரமாக, மறு உலகத்தாரின் வலையில் அகப்படாமல், வேறு உலகத்தைப்பற்றிக் கனவுகாணுமல் இந்த உலகத்திலே எல்லாச்சுகங்களும் இருக்கின்றன என்று எண்ணுகின்றனர். அவ்விதமே போதிக்கப்பட்டும் வருகின்றனர். இங்கோ "இவ்வுலகு மாயை" எனப்படுகிறது. ஆனல் பகுத்தறிவுவாதிகள் "மாயை எங்களுக்குத்தானே? சிற்றரசர் சீமான்களுக்குமோ? என்று கேட்கின்றனர்" மாயா உலகு மகாராசர்களுக்கு மகிழ்ச்சியைத்தருவானேன்? எங்களுக்கு வாட்டத்தைத்தருவானேன்? என்றுகேட்கின்றனர்.

இங்கு பெரும்பான்மையான சமூகத்தைச் சிறுபான்மையினரான ஆரியர் சமூகம் அடக்கி ஒடுக்கி ஆண்டுவருகிறது, நசுக்கப்பட்ட மக்கள் நசுக்குபவர்களைக் கண்டு உள்ளம் கொதிப்பது இயற்கைதானே. எவ்வளவு நாள் அவர்களால் அடிமையாக வாழமுடியும்? ஆதலால் தமிழர்கள் ஆரியரை ஒழிக்க எண்ணுகின்றனர், தமிழர்களுடைய எதிர்ப்பு ஆரியத்தை கலகலக்கச்செய்துவிட்டது. இது ஆரியகனபாடிகளுக்கு அச்சத்தைக் கொடுத்துவிட்டது.

"ஓய்! சூத்ராள்லாம் நாடுஎங்களுது, கோயில் எங்களுது என்கிறான்களுங்காணும், என்ன அநியாயம்! பிராமணுள் என்ன உயர்ந்தவா? தமிழர்கள் என்ன தாழ்ந்தவாளா? என்றுநம்மைக்கேட்கின்றார்கள். ஏது! ஜாதி ஆச்சாரம் கெட்டுப்போச்சு. அரசர்களெல்லாம் பிராமணர்களைக்கடவுளின் அவதாரம்என அந்தக் காலத்தில் எவ்வளவு மரியாதை செய்தார்கள்! இப்பொழுது என்னுண்ணு நம்மை அவாள் பார்ப்பான், என்று திட்டுகிறார்கள்" என்று ஆரியகனபாடி தமது நண்பரிடம் அங்கலாய்த்தார்.

"ஆமாங்காணும் அதோடபோச்சா! அவாளே சூத்ரான்னு சொல்லக்கூடாதாம். அவாள்லாம் இந்நாட்டுச் சொந்தக்காராளாம், தமிழர்ன்னு சொல்லணுமாம். இதெல்லாம் சு. மக்கள் வேலைகள். நம்ம வேதத்தையெல்லாம் படிச்சுட்டா அதிலே உள்ள ஆபாசத்தை எல்லாம் [illegible] வாங்கறு, நம்மைப்பற்றி உயர்த்திப் பேசுபவர்கள்பாடும் திண்டாட்டமாயிட்டது. நம்ப கும்பகோணத்திலே பாருங்கோ நமக்கு ஆதரவாகப்பேசும் கிருபானந்தவாரியாரையே சு.ம.க்கள் கேள்வி கேட்டாளாம். அவராலே பதில்சொல்ல முடியாமே ஓடிவிட்டாராம்! அவாளே நாம் படிக்காதவான்னு நெனச்சோம். ஆனல் அவா கேள்விக்குப் பதில்சொல்ல முடியல்லே, என்னமோ வர வர ஜனங்களண்டெ பிராமணபக்திகுறைந்து வருகிறது. காலம்கலிகாலமோன்னோ" என்று அந்தக் கனபாடியும் இந்தக் கனபாடியும் அங்கலாய்த்துக்கொண்டனர்.

இவ்விதம் சுயமரியாதை இயக்கமானது தமிழர் உள்ளத்தில் புரட்சிப் புயலையும் ஆரிய உள்ளத்தில் மிரட்சியையும் உண்டாக்கிவிட்டது. பாவம்! மன்னர்களைத் தனது வஞ்சகச் செய்கைகளினுல் மண்டியிடச்செய்து ஒய்யாரமாக உலவினர். ஆனல் காலம் ஒரேவிதமாக இருக்குமா? அலைகடலை அடக்கி மரக்கலம் செலுத்தி ரோமாபுரிவரை சென்று வாணிபம் செய்து அங்கும் தனது நாகரிகத்தை நிலைநாட்டி 'தமிழகம் நாகரிகத்தின் ஊஞ்சல்' என்று எல்லோரும் புகழும்படி வாழ்ந்ததமிழ்மக்களை இன்று ஆரியம் அடிமைப்படுத்தியது. கோயில்களெல்லாம் பண்டைத் தமிழ் மன்னர்களால் கட்டப்பட்டது. ஏராளமான செல்வங்கள்- கோவில்களுக்காக விடப்பட்டன. ஆனல் அது தமிழருக்கு உபயோகமாகவில்லை. கோயில் சொத்துக்களைக்கொண்டு ஆரியர் தமது சுகபோக வாழ்வை நடத்துகின்றனர். ஆனல் கோவிலுக்குள் சென்று தமிழர்கள் தெய்வத்தை வணங்கக்கூடாதாம். நாம் கோயிலுக்குள் சென்றால் தெய்வ சன்னதி அசுத்தமாகிவிடுகிறதாம். நந்தன் சிறந்த தெய்வபக்தனும் இருந்தும் அவன் தெய்வத்தைச் சென்றுபார்க்க முடியவில்லை பறையன் என்ற காரணத்தால்! நெருப்பில் விழுந்து பிராமணன் ஆன உடன்தான் அந்தத்தெய்வமும் அவனை ஏற்றுக்கொண்டதாம்.

என்ன அநியாயமய்யா! தமிழரின் செலத்தால் ஆடம்பரமாக ஊர்வலம்வரும் கற்கடவுளர்கள் தமிழரின் பூசையை ஏற்காதாம்: ஜாதிபேதம் பாராட்டும் தெய்வம் நமக்கு எதற்கு? நம்மைத்தாழ்ந்தவனாகவும்,ஆரியரைஉயர்ந்தவராகவும்நினைக்கும் தெய்வம் நமக்கு எதற்கு? ஆரியர் வேதம் ஓதுவதைக்கேட்டால் தமிழன் காதிலேயே ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமாம்? இதைவிடத்தமிழர்க்கு மானக்கேடான விஷயம் வேறுஉண்டா? இதை உணர்ச்சியுள்ள தமிழ்மகன் ஒப்புக்கொள்வானு? இதனல் தமிழரின் மானத்திற்கு இழுக்குவாராதா? இவைகளெல்லாம் கேட்டால் நம்மைநாத்திகன் என்று கூறுகின்றனர்.

வாழ்ந்த சமுகம் இன்று தாழ்ந்து கிடக்கிறது. தாழ்ந்த சமுதாயம் புது உலகை நாடவிரும்புகிறது. அடிமைத்தளைகளை அறுத்தெறிய விரும்புகிறது. தனது உரிமையைப் பாதுகாக்கஎண்ணுகிறது. இதிலே தவறு என்ன இருக்க முடியும்? ஒருவன் வீட்டிலே அந்நியன் வாழ்வதோடு அல்லாமல் அவனை அவமானமும்படுத்தினுல் ஆத்திரம் ஏற்படாதா? அப்படிப்பட்டவனை விரட்டத்தானே தோன்றும்!

எங்களுடைய நாட்டில் இருந்துகொண்டு ஆரியர்கள் எங்களைத்தாழ்வாக

(8-ம் பக்கம் பார்க்க)

# ★ வீரவாள்! ★

S. நாராயணசாமி

பண்டைக்காலத்தில் தமிழ் மன்னர்களிடம் தனிஒளிபோல் பிரகாசித்தவாள், மாற்றானிடம் மானத்தைப் பறிகொடுக்காமல் வீரமுடன் சமரில் பெரும் போர் நடத்திய வாள், வீரவாள்! அத்தகைய வீரவாளேந்தி, தமிழகத்தில் தனிமுரசு கொட்டிட, இமயம்வரையில் சென்று வென்று, இணையில்லாத் தமிழ்க்கொடியை நாட்டின அத்தமிழ்மன்னர்கள் ஆண்ட இத்தமிழகம், தற்போது இருக்கும் நிலையைக் கவனித்தால், மனம் புண்ணில் கோல்பட்டதுபோல் துடிக்கிறது. ஆரியக்கள்ளர்கள் தமிழ்நாட்டில் நுழைந்தார்கள், அழித்தார்கள் தமிழகத்தை. தமிழ் ஒளியைக் குன்றச்செய்தார்கள், செந்தமிழ் சிதைந்தது, தமிழ்மக்கள் தாசரானார்கள். வீரர்கள் கோழைகளாகினர், வீரவாள்பிடித்தகை வீணர்களின் வலுவற்ற கோரைப்புல்லைப் பிடிக்கலாயிற்று. பகுத்தறிவு துலங்கிக்கொண்டிருந்த தமிழர் உள்ளம் பாழடைந்துபோய் விட்டது, கண்மூடிக்கொள்கைகளைக் கையாள நேர்ந்தது. மோட்சம், கடவுள் என்ற மூடநம்பிக்கையைக் கொண்டாடமுற்பட்டார்கள். வைதிகவலையில் வீழ்ந்தார்கள், வேதம், ஸ்மிருதி, புராணம் முதலிய போதைதரும் ஆரியமதுவை உண்டு, கருத்தைப்பாழ்படுத்திக், கண்ட கடவுள்களைகைஎடுத்துக்கும்பிடமுயன்று தமிழ்நாட்டைச் சுடுகாட்டிற்குச் சமமாகச் செய்துவிட்டார்கள்.

அமாவாசை, கிருத்திகை, ஏகாதசி, சோமவாரம் இன்னும் பலவிதமான கணக்கற்ற விரதங்களை ஏற்றுக்கொண்டு தமிழ்மக்கள் இப்படிக் காலம்கடத்துவது சரியா? மூடக்கொள்கைகளை முன்னேற்றமடையச் செய்யலாமா? உழைப்பாளிகளுக்கு உண்ணவும் உணவின்றி, மனம்குன்றி வாழ்வைவெறுத்து, என்றறந்தோம் என்ற நிலை எண்ணும்படி நந்தமிழ்நாடு இருக்கலாமா? பண்டைய தமிழர்கள் இருந்த நிலைஎன்ன? பார்ப்பனர்கள் நம்நாட்டில் கால்வைத்த பிறகு இருக்கும் நிலை என்ன? ஆரியச்சூழ்ச்சி நன்றாக வெளிப்படையாகத் தெரிந்த பிறகுமா நம்நாட்டில் அப்பழயகதைகளை நம்புவது? ஓட்டலில் பேதம், கோயிலில் பேதம், ஜாதியில்பேதம், இன்னும் பலவிதமான பேதங்கள் நம்நாட்டில் தாண்டவமாடலாமா? புராணங்களைப்படித்துச் சொல்லும் பண்டிதர்களைச் கேட்கிறேன், கலையை நிலைகுலையச்செய்யவேண்டாம், கருத்துக்கு மாறான கட்டுக்கதைகளை நாட்டில் பரப்பாதீர்கள், இதுவரையில் நம்நாட்டிலுள்ள கணக்கற்ற கடவுள்களால் தமிழ்மக்களுக்கு ஏதாவது பயனுண்டா? மக்களின் துயரம் சிறிதாவது நீங்கிஇருக்கிறதா? மறைந்த தமிழ்வாழ்வு மறுபடியும் பிரகாசிக்க வழிகோலுகிறதா? எத்தனை காலத்துக்கு நமஉடலில் உயிருள்ளவரையில் நம்நாட்டிலுள்ள கடவுள்களை நம்பிக்கொண்டு இருந்தால் முன்னேற்றமடைய முடியுமா? அல்லது விரதபக்தியினால் நம் துயரமெல்லாம் விலகிவிடுமா? அப்புராணக்கதைகளால் மறைந்த நம்முன்னோர்களின் ஆவியைப் பார்க்கத்தான் முடியுமா, அவர்களுடன் பேசத்தான் ஆகுமா? எதற்குப்பயன்படுகிறது இப்புராணம் என்று கேட்கிறேன், கண்ணன்வெண்ணெய் திருடின கதையையும், முருகன் பெண்ணைக்களவாடின கதையையும், கோவிந்தன்கூந்தல்மேல் ஆசைப்பட்டதையும், விஷ்ணு விவேகமில்லாத செய்கைகள் செய்ததையும், பிரமன்தான் பெற்றமகளைப் புணர்ந்ததையும், பத்தினி ஐந்துபேரைச் சேர்வதையும், சிவன் மனைவியுடன் சம்போகலீலையில் சுதாகாலமும் உழலுவதையும், இன்னும் பலவித கடவுள்கள், கேட்க நாராசத்திற்கொப்பான திருவிளையாடல்கள் செய்த இந்தப் புராணங்களைத்தான் படிக்கத்தெரியுமா? நாட்டுக்கு நலனுள்ள கதைகளைச் சொல்ல அவர்களுக்கு தெரியாதா? இன்னும் எத்தனைகாலத்துக்கு இப்புராணத்தைப் புதைந்துபோகாமல் பாதுகாத்துக்கிடப்பார்கள். இவர்கள் புராணத்தை உருக்கமாகக்சொல்லி மகேஸ்வரன் அடியார்கள் போல் நடிக்கும்அந்தப் பண்டிதர்களுக்கு என் இந்தப் பிரசார உத்தியோகம், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று கைலாயத்தைக் கண்டவர்போல் பேசும் இவர்களுக்கு என் இந்த வயிற்றுப் பிழைப்பு, கொள்ளையடிக்கும் வேலை, இவர்கள் சொல்லும் கடவுள் இவர்களை என் வயிற்றுப்பிழைப்புக்காக இப்படிக் கத்தவைத்து இருக்கிறார், அக்கடவுள் இவர்களை அரசர்களாகவிட்டிருக்கலாமே. ஆரிய வேஷத்தை நாட்டில் மக்கள் உணர்ந்த பிறகுமா இந்த மூடப்பிரசாரப் பிரசங்கம்செய்வது,?

நாட்டில் புரட்சிப்புயல் வீசிக்கொண்டிருக்கிறது, இச்சமயத்தில் காட்டுக்கூச்சல்போட்டுக் கருத்துக்கு எதிரானகதைகளைச்சொன்னால் மக்கள் ஆதரிப்பார்களா? ஒற்றுமையே எமது உயிர், மக்கள் எல்லோரும் ஓர் குலம், ஜாதிபேதம் தேவையில்லை, பிறப்பில் ஆண்பெண் தவிர வேறு வேற்றுமைகிடையாது, உயர்வு தாழ்வு நம் தமிழ்நாட்டில் உலவக்கூடாது, மடைமைமடியவேண்டும், பகுத்தறிவு பிறக்கவேண்டும், என்று வாலிபர்கள் உள்ளம் வீறுகொண்டு, கனலைப்போல் எழும் இக்காலத்திலா, முக்கண்ணன் கதையையும், முப்பத்துமுக்கோடி தேவர்கள்கதையையும்கேட்டுக்கொண்டிருக்கமுடியும்? இது பகுத்தறிவுக் காலம்; பார்ப்பனர்கள் ஜாலம் பலிக்காது, பண்டிதர்கள் வேஷம் வெளியாகிவிடும், வீணாகப் பொய்யும்புரட்டும்,மடைமையும் கொடுமையும் நிறைந்த புராணங்களைச் சொல்லிக்காலத்தைக் கழிக்கவேண்டாம் என்று சொல்லுகிறேன்.

நிர்வாணப் பிச்சைகேட்கும் கதையை ஓர் புண்ணியக் கதையாகக் கொண்டாடுவதா, இது தமிழகத்துக்குஏற்றதா,இதை மக்களுக்கு எடுத்துச்சொல்லும் பண்டிதப்பிரசங்கிகளின் வாய் கூசவில்லையா, இதை மக்கள் கேட்டு எப்படிச் சகிக்க முடியும்? பகுத்தறிவுள்ளவர்களானால் அப்பிரசங்கி சொல்லும்போது என்ன நடக்கும் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை, உங்களுக்குத் தெரியும். தேவர்களுள் சிறந்தவர்களான மும்மூர்த்திகளுக்கு இப்பிச்சை அடுக்குமா? அவர்கள் கேட்கத்தான் தகுமா? உணர்ச்சியுள்ள கணவனானால் தன்மனைவியை நிர்வாணமாகப் பிச்சைகொடுக்க விடுவானா? நிர்வாணமாகத்தான் பக்தர்களைக் கடவுள் சோதிப்பதா? மானமுள்ள பெண்ணாய் இருந்தால் அப்பிச்சைக்குச் சம்மதிப்பாளா? இதுதான் பக்தியினால்வரும் பலனா? இதனால் தமிழகத்துக்குஏதாவது நன்மையுண்டா, அல்லது இதைப்போல் தமிழ்ப்பெண்கள் நடக்கவேண்டும் என்று எடுத்துச்சொல்லும் முறையா? இப்புராணம்போல் தமிழ்நாட்டில் நடந்தால் என்ன நடக்கும் என்று பண்டிதர்களைக் கேட்கிறேன்.

வீரமுடன் ஆண்டவர்கள் தமிழர்கள், ஒளிவீசியமொழி தமிழ்மொழி, பகுத்தறிவுத் தென்றல் வீசியாது தமிழ்நாடு, அத்தகையநாட்டில் சோம்பேறிகளின் புராணங்கள் சொகுசாக வாழ்வதா, உழைப்பவன் ஒருவன் உண்டுகளிப்பவன் ஒருவனா? நாட்டின்நிலை இப்படியேபோய்க் கொண்டிருந்தால் மக்கள் ஆரிய அடிமையிலிருந்து விடுதலைபெற்றுப் பண்டைய வாழ்வைப்போல் வாழமுடியுமா? காலம் வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. கட்டுக்கதைகளின் காட்சிகள் இனித் தமிழ்நாட்டில் பலிக்காது. வாலிபர்கள் முழக்கம், பகுத்தறிவின் தீப்பொறி, தமிழகத்தில் பரவிவிட்டது. சுயமரியாதை தளிர்விட்டுத் தழைத்தோங்கும் காலம். இக்காலத்தில் பார்ப்பனர்களின் பகல் வேஷமும், பண்டிதர்களின் காட்டுக்கூச்சலும் நாட்டில் நடமாட முடியாது. வீணர்கள் கோட்டை இடியும்நாள் நெருங்கிவிட்டது, இராமாயணம், பாரதம், பாகவதம், முதலிய பொய் நூல்கள், தமிழ்நாட்டில் உலவமுடியாது.

( 8-ம்பக்கம் பார்க்க )

# ★ வாலிபர்களுக்கு. ★

என் அன்பான வாலிபர்களே! உங்களுக்கு ஒன்று எழுதலாமென்று நினைத்து எழுத ஆரம்பிப்பதற்குள், அநேகம் எனக்கு முன்னுல் வந்து நிறைந்துவிடுகின்றன. அதனுல், வியாசம் கோர்வையிலிருந்து அங்கும் இங்கும் துள்ளிக்குதிக்கிறது. நானும் அதைத்தான் விடலாமாஎன்று எல்லாவற்றையும் ஒன்ருகவே எழுதிவிடுகிறேன். வியாசம் எழுதும் முறையில் குற்றம் பார்க்காது, விஷயத்தைக் கவனித்துக் கவனித்ததைஆலோசனையில் வைத்துக்கொள்ளுங்கள்.

நாம் எதிலும் முற்போக்கடையாமல் இருப்பதற்கு, நம்முடைய சாதி ஆசாரங்களும், சமயக் கோட்பாடுகளும், உலகப் பொது விதியை உல்லங்கனம் செய்யும் புத்தியின் குறைபாடுகளும் காரணமென்று, பொதுக்கடவுள் வழியில் நடக்கும் நம் நாட்டுஅறிஞர்களும், நம்மிடம் நட்புடையவர்களும் சொன்னர்கள். கேட்பவர்களில்லே. நமது சாத்திரிகளும், பண்டிதர்களும், சமயவாதிகளும் சம்பாதித்த அறிவினுல் அவைகளைச் செழிப்படையச் செய்யமுடியவில்லே. இவர்கள் எப்போதும் உயர்ந்த புத்திக்குப் புறத்தேதான் தங்கள் பெருமையைக் காட்டுகிருர்கள். மற்றைத் தேசங்களில் உயர்வுக்கு அவசியமான இடத்தில் உயிரையும் இருதயத்தையும் திரணமாக மதித்து, உயிர்நாடிக்கொப்பான வளர்ச்சியையும், உண்மையையும் மேலாக எண்ணிக், கேவலம் காரியலாபத்தையும் தற்பெருமையையும் தாழ்வாக நினைக்கிருர்கள். நாமோ எது எக்கேடு கெட்டுபோனுலும் போகட்டும், தன்காரியமும் லாபமுமே மேலானதென்று நினைக்கிருேம்.

வாலிபர்களே! மதத்தைப்பற்றின உண்மையைச் சொல்லுகிறேன், கவனமாகக் கேளுங்கள். சுயமரியாதைக்காரர்கள் மதத்தைத் தூற்றுகிருர்கள். உண்மைத்தத்துவம் அறியார்கள், கல்வி யறிவில்லாதவர்கள் என்று சொல்லிவிட்டால் போதுமா? மதத்தினுல் உண்டான கொடுமைகளும் அநீதிகளும் பலதரம் எடுத்துக்காட்டப்பட்டது. அதற்குப் பரிகாரமோ சமாதானமோ பண்டிதர்கள் சொல்லவில்லேயே! பண்டிதர் சேதுப்பிள்ளேயவர்கள் வடநாட்டில் தென்னுட்டைப்பார்த்தவரல்லவா, கம்பர் என்று சொன்னதிலிருந்து கண்டவிஷயமும் பெருமையுமென்ன அய்யா என்று கேட்டுக்கொண்டுதானே வருகிருேம். வாய்க்கு வந்ததைச்சொல்லிவிட்டு உள்ளேஇருந்துவிட்டால் கல்வி யறிவு எங்களுக்கு எப்படிவரும்? வீராப்புடனும் பெருமையோடும் பேசுவதுபோல நியாயங்களே உண்மையான பொருத்தத்தோடு சொல்லவேண்டும்.

மதமென்பது வாய்ப்பேச்சல்ல; ஊகங்களும் கொள்கைகளுமல்ல; சாதியையும் சாதி ஆசாரங்களேயும் பற்றியதுமல்ல. மதமென்பது உயர்ந்தசாதி என்பவர்களேப்பற்றிக்கொண்டு மற்றவர்களே த் தாழ்ந்த சாதியரர்களாக மதித்துத்தீங்கிழைத்துக்கீழாக்கி வைப்பதில் வாழ்ந்துகொண்டிருப்பதுமல்ல. ஆத்மாவிற்கும் கடவுளுக்குமுள்ள சம்மந்தமே மதமென்பதை உயர்ந்த சாதியாகவும் தாழ்ந்த சாதியாகவும் செய்ய எப்படி முடியும்? அப்படிச் செய்ததினுலேயே வியாபார தோரணையில் வந்து பல அக்ரமங்கள் மலிந்துவிட்டன.

புஸ்தகங்களிலும், வார்த்தைகளிலும், உபந்நியாசங்களிலும் மதத்தைக் கண்டுபிடிக்க முடியாது. மதமென்பது அநுபோகத்திலிருக்கிறது. அனுபோகத்திற்குக்கொண்டுவருவதற்கு முதற்படியாகப் பற்றின்மை வரவேண்டுமென்றே மதத்தின் உண்மை சொல்லுகிறது. இருளும் ஒளியும்போல உலக ஆசையும் கடவுளேப் பற்றிய ஆசையும்சேர்ந்துநில்லாவென்றே கடவுளேயடையப்போனவர்கள் சொன்னர்கள். கடவுளே வணங்கும்போது உலகபோகங்களில் மூழ்கி யிருப்பது உபயோகப்படாதென்றே மதத்தின் பலன்கள் சொல்லுகின்றன. அருள் பழுத்த பராபரமே, நிராசை யின்றேல் தெய்வமு முளதோ என்றும், ஆசையற்றவிடம் சிவமென்றும், வேதத்தின் சம்மதம் சகலமும் தவிர்ப்பதே கருத்தாகுமென்றும், சமயத்தை யுணர்ந்த பெரியவர்கள் சொன்னர்கள்.

பலவித மூடநம்பிக்கைகளிடமும், புத்தியில்லாதவர்களே ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்காகக் கடவுளுக்குப்பிரதிநிதிகளாகச் சொல்லிக்கொள்கிறவர்களிடமும் மதத்தின்பேரால் வித்யாசப்படுத்தி நடத்தப்படும் கொள்கைகளிடமும், உயர்ந்த சாதியென்ற ஆணவத்திடமும், ஆசாரத்திலுயர்ந்தோம், அனுட்டானத்தில்தேர்ந்தோம், நித்யகர்மானுட்டானம் நித்தியம் செய்தோம், பிரசாதம் பெற்றுக்கொள்வது தவருேம், பூச்சும் பொட்டும் போடாமலிருந்ததேயில்லேயென்கிறபேச்சின் பெருமையிலும் மதம் வாழாது. மதமென்பது நம்புவதற்காகமாத்திரம் பிரயத்தனம் செய்வதல்ல. ஆசையிலேயே உழன்றுகொண்டு பாடுபட்டுத்தேடின பொருளேப் பார்ப்பனனுக்குகொடுப்பதுமல்ல. முன்னேர்களின் வார்த்தைகளேயெல்லாம் கிளிப்பிள்ளேகளேப்போல மனனம்செய்துகொண்டிருப்பதுமல்ல. இவைகளேயே மதமென்றுநினைத்து நடந்து, வாயில்மதஉண்மைகளேப்பேசி மதத்தால்ராசீக விஷயங்களேமுடித்துக்கொள்வதும் மதமாகாது. இந்திரியங்கள் எவ்விடம் சென்ருலும் மனம் அதன் பின்னே செல்லாமல் தடுத்துக் கெட்ட எண்ணங்களே நினைக்கும் சக்தி முழுமையும் நன்ருக இழந்து பற்றுதலே விட்டுக், கண்டோர் நடுங்கும்படியான பரிசுத்தத்தன்மையும் வந்தவிடத்தில்தான் மதம் விளங்கும். பற்றின்மை ஒன்றினுல் மாத்திரம் அழியாத்தன்மையுண்டாகுமென்று. சமயங்கள் சொல்லுகின்றன. உன்னிடமுள்ள சகலத்தையும் விற்று ஏழைகளுக்கு உதவிவிட்டு என்னைப்பின்பற்று என்று ஏசுகிறிஸ்தும் சொல்லுகிருர். உன்பற்ருெழிய ஒரு பற்றுமில்லே உடையவனே என்ருர் பட்டினத்தாரும். ஆகவே மதத்தின் உயர்வு பற்றின்மை, பற்றின்மையால் மதம்விளங்கவேண்டும். பற்றின்மையைப் பாட்டால் மற்றவர்களுக்குச் சொல்லி ஏய்ப்பதில் மதம்வந்துவிட்டது. வயிறு வளர்ப்பதில் தடைவராமலிருக்க அதற்கிசைந்தவர்களின் நூல்களும் அர்த்தங்களும் கதைகளும் மதமாகிவிட்டது. பற்றின்மை குறைந்துவிட்டது. அதனுல் இந்திரியவிபகாரங்களே மதங்களாகி விட்டன. இந்திரிய போகங்களுக்கு மதத்தையனுகூலப்படுத்திக்கொண்டமையால் ஆத்மஞானம் போய், கொடுமைகளும் நியாயவிரோதங்களும் மூடநம்பிக்கைகளோடு முடிந்து வயிற்றுப்பிழைப்பிற்கு வழிகளாயின.

உண்மையும் நடக்கையும் சத்தியநெறியும் அன்பான இரக்கமும் உண்டாகிப் பற்றுதலேயெல்லாம்விட்டு ஆத்மாவையும் அதற்கு மேற்பட்டதையும் தெரிந்துகொள்ள மதம் உபதேசித்திருக்குமா? அல்லது தானும் தன்கூட்டத்தாரும் உலகபோகங்களே அனுபவித்துக்கொண்டு மற்றவர்களே அதில் பிரவேசிக்காமல்தடுத்துத்தள்ளிக்கொடுமையும் ஓரமும் செய்வதற்கு மதம் உபதேசித்திருக்கமுடியுமா? ஆலோசித்துப்பாருங்கள், பக்கத்துப் பெரிய பண்டிதர்களேயுங்கேளுங்கள்.

பையப்பைய மெள்ள மெள்ளச் சிறுகச்சிறுகப் படிப்படியாகத்தானே மதத்தின் உண்மைக்குப் போகவேண்டும். குழந்தை பிறந்து-தவழ்ந்து-மண்டிபோட்டுத்தானே நடக்கிறது, சரியை-கிரியை கைங்கரியம் ஆகிய எல்லாக் கர்மத்தையும் செய்து தானே ஆகவேண்டுமென்று சொல்வதெல்லாம் ஏமாற்றுப் புத்திக்கு ஏற்ற நியாயம்; பற்றுதலேவிடப்பயப்படுங் குணம்தவறு. நமக்கு, மடாதிபதியாய்க் குருவாய்—ஆச்சாரியாய்இருந்துமதஉபதேசம் செய்து வருகிறவர்கள் எந்தஆசையைவிட்டிருக்கிருர்கள், எந்தப்பற்றின்மையைப்பயின்றிருக்கிருர்கள்? எத்தனை நாளேக்குத்தான் குழந்தை ஊர்ந்தும் தவழ்ந்தும் கொண்டிருப்பது? நடந்து பழகுவதுதான் எப்பொழுது? குரு—ஆச்சாரி—மடாதிபதி மகந்து முதலான

(6ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 27—8—44 ஞாயிறு

## சந்தர்ப்ப வாதமா?

★

நாட்டைத்துண்டாடுவது நடவாதகாரியம், அது துரோகிகளின்செயல், சர்க்காருக்குச் சலாம்செய்து வாழ்பவர்களின் பல்லவி. பெற்றதாயைவெட்டும்பாதகச் செய்கையாகும் என்பனபோன்ற சொற்களால் ஆரியப் பத்திரிகைகளும், அவைகளுக்குத் துணையாக இருந்துவரும் சில கோமாளித்தாள்களும் நாள் தவறாது வசைபாடி வந்தன.

ஜனாப் ஜின்னா அவர்களுக்கு லீக்தோழர்களினால் பரிசாகக் கொடுக்கப்பட்ட "வீரவாள்" ரொட்டியைத் துண்டுசெய்வதற்குத்தான் பயன்படுத்த முடியுமேயன்றி, மற்றக் காரியங்களுக்குப் பயன்படுத்தும் முறைதெரியாது என்று கையாண்டிசெய்து சித்திரம்எழுதியும்தங்களின்மேதாவித்தனத்தைக்காட்டிவந்தன. அதேபோன்று திராவிடநாட்டுப்பிரிவினையைப்பற்றித் தீவிரக் கிளர்ச்சி செய்துவரும் நமது தலைவர் பெரியார் அவர்களையும், மற்றத் தலைவர்களையும், ஆதாரமற்ற விதத்தில் அவ்வாரியம் எதிர்த்தும் வந்தது.

அந்நாளிலிருந்தேஜனாப்ஜின்னா அவர்களும், பெரியார் அவர்களும் நாட்டின் உண்மை நலன்கருதும் ஏனையோரும் சொல்லிவந்தநல்லுரைகளையும், ஆதாரத்துடன்கூடிய எடுத்துக்காட்டுகளையும் ஆரியஏடுகளும், அவைகள்தம் கூட்டத்தினரும் அலட்சியமாகக் கருதிவந்தனர்.

ரொட்டியைத் துண்டுசெய்யமட்டுந்தான் உபயோகப்படும்என்றுகருதியிருந்த ஜனாப்ஜின்னாவின் வீரவாள், இந்நாட்டின் நலனுக்கெதிராகயிருந்துவரும்அனைத்தையும் ஒழிக்கவே முற்றிலும் உபயோகப்படுத்தப்படும் என்பதை கையாண்டிசெய்துவந்த கூட்டத்தினர் இன்றளவிலாவது உணர்ந்தது பற்றி நாம்பெருமைகொள்ளவேண்டியதே.

திராவிடநாட்டுப் பிரிவினை என்பது கனவிலும்கருதும்படியானதல்ல என்று இறுமாந்திருந்த கூட்டத்தினர், திராவிடஸ்தான் கொடுக்கப்படவேண்டுவதும்அவசியந்தான் என்று கருதும் வண்ணம் நிலைமை இன்று மாறியிருப்பதைக்காண நமது முயற்சிக்கு வெற்றி அதிவிரைவில் உண்டு என்றே சொல்லவேண்டி இருக்கிறது.

நாட்டுத் துரோகிஎன்று ஜனாப்ஜின்னாவைத்தூற்றியவர்களும், ஏடுகளும்இன்று அவரைப்பெரிய தலைவர்என்றுபோற்றும்படியான நிலைமைக்கும், அவருடன் சமரசம்பேசினால் ஒழிய நாட்டின் விடுதலை பெறுவதென்பது முடியாதகாரியம்என்ற முடிவிற்கும் வந்துவிட்டனர்.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள்கேட்கும் "திராவிடஸ்தான்" நடைமுறையில் வகுக்கக்கூடியதல்ல; ஒரு சிலரின் சுயநலக்கூப்பாடு என்று தப்பட்டை அடித்துவந்த கூட்டத்தினரிலிருந்தே "திராவிடஸ்தான் கொடுக்கப்படாமல் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாரின் உண்மைக்கிளர்ச்சியைத் தீர்க்கமுடியாது" என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவருவதைக் காண்கிறோம்.

ஆக இந்நிலைமையைக் கண்டபின்னர், "முட்டியபின்குனிதல்" என்பதற்கேற்ப நாம் நாட்டுப் பிரிவினைக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டிவந்த ஆராய்ச்சிகளை ஆரியக்கோமளி ஏடுகள் முதல்அனைத்தும் இன்று ஆதரிக்கக் கிளம்பிவிட்டன.

இதை நாம் வரவேற்கின்றோமெனினும், இவ்வாரியஏடுகளின்போக்குச்சமய சந்தர்ப்பவாதமாகமாறாமலும், தங்களின் "பூர்வீக ஞானத்திற்குப்" போகவொட்டாமலும், நேர்மையான முறையிலேயே பணியாற்றுமென்று நம்புகிறோம்.

நம்நாட்டின் விடுதலை இன்னும் தாமதித்துக்கொண்டுவருவதற்குக் காரணம் அந்நிய அரசாங்கம்மட்டுமல்ல; நாட்டின் உண்மைநிலையை மறைத்தும், மற்றக்கட்சித்தலைவர்களின்கோரிக்கையை நியாயமான முறையில் மக்களுக்கு எடுத்துக்காட்டாது, செருக்கினால் கையாண்டி செய்துவருவதுமான பிற்போக்கான கொள்கைகள், பத்திரிகைகள் நடத்துபவர்களிடமிருந்து விலக்கப்படாததேயாகும்.

எனவே, நாட்டுப்பிரிவினை பற்றி ஆரியஏடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய ஞானோதயம் சமய சந்தர்ப்பவாதமாகயிருக்குமா அல்லது உண்மையான வாதமா என்பதைப்பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## அச்சு முறிகிறது!

### பிரான்ஸ்.

இரண்டு மாதங்களுக்கு முன் வடபிரான்சில் இறங்கிய நேசதேச இராணுவம் நார்மண்டியிலும், பிரிட்டானியிலும் வெற்றிபெற்று, பிரான்சின் தலைநகர்மீதும் பாய்ந்திருக்கிறது. இதே நிலையில் அமெரிக்கத் துருப்புகளும் பாரிஸ் நகரின்சுற்றுப்புறங்களில் மகத்தான போர்புரிந்து வருகிறது. ஜெனரல் டிகாலே தனது தாய்நாட்டிற்குத் திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பகுதியில்ஜெர்மன் துருப்புகள் வாபஸாக முடியாதபடி பிரெஞ்சு சுதந்திரத் துருப்பினர் தீவிரமான போரில் ஈடுபட்டுள்ளனர்.

### ஜெர்மனி.

கிழக்குப் பிரஷ்யாவில் போர் தொடுத்துக்கொண்டே ஜெர்மனிக்குள்ளேயும் புகுந்துவிட்டனர் வீர ரஷ்யப் படையினர். அவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு ஜெர்மன் துருப்புகள் திணறி ஓடுகின்றன.

### ஜப்பான்.

இந்தியாவிற்குள் மிகுந்த அட்டகாசத்துடனே புகுந்த ஜப்பானியர், இன்று இந்திய எல்லையைவிட்டு ஓடிப் பர்மாவுக்குள் வாபஸாகுகின்றனர். பர்மாவிலும் இந்தியத்துருப்புகள் 5—மைல் தூரத்திற்குமேல் முன்னேறிச்சென்றுள்ளனர். மீட்கினாவைப் பிடித்ததுருப்புகளும் மேற்கொண்டு முன்னேறுகின்றன. பர்மா ரோடை மீண்டும் திறந்து சீனத்துருப்புகளுக்கு வேண்டிய உதவிசெய்து ஜப்பானிய ஏகாதிபத்ய வெறியை தகர்த்தெறிவதே இதன் முக்கிய கருத்தாகும்.

### இத்தாலி.

இந்தியத் துருப்புகள் பிளாரன்சுக்குக் கிழக்கே, அர்னோ நதியைக் கடந்துவிட்டன. எட்டாவது இராணுவத்தைச் சேர்ந்த போலிஷ் வீரர்கள் மெட்ரோவுக்குப் பின்வாங்கியிருந்த எதிரிகளைத் தீவிரமாக எதிர்த்து நிர்மூலஞ்செய்தனர். ஆக உலக மக்களின் நல்வாழ்விற்குக் கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கேடுவிளைவித்துவரும் எதேச்சாதிகார வெறியர்களான, இட்லர், டோஜோ, முசோலினி, ஆகியவர்களின் "அச்சு" முறிகிறது, "ஐந்தாம் படையினர்" வயிறு எரிகிறது!

---

## 'திருவாரூரில்'

தஞ்சை மாவட்டத்தின் முக்கியபகுதியாகிய திருவாரூரிலே 18—8—44 வெள்ளியன்று காலை முதல் திரள்திரளாகத் திராவிட மக்கள் பல பகுதிகளிலிருந்தும் வந்துசேர்ந்த வண்ணமாயிருந்தனர். எங்குபார்த்தாலும் ஒரேகூட்டம், அக்கூட்டத்தினரிடையே உணர்ச்சிததும்பும்வார்த்தைகள், அன்று திருவாரூர் ரயிலடியிலும் சமாளிக்கமுடியாத அளவு நெருக்கம். இவ்வளவும் எதற்காக? காஞ்சித் திராவிட நடிகர்கழகத்தினரால் அன்றிரவு நடத்தப்பட்ட சந்திரோதயம் நாடகத்தைக் கண்டு களிப்பதற்காகவே. சுருங்கக்கூற வேண்டுமாயின் 18—8—44ல் திருவாரூர் ஓர் புத்துணர்ச்சி பெறும் புரட்சி வேகங்கொண்ட நகரமாகவே விளங்கிற்று.

மாலை 7-மணியிலிருந்தே கருணாநிதி தியேட்டரில் மக்கள்திரள்திரளாகக்குவிந்

வண்ணமிருந்தனர், நகரின் பலமுக்கியஸ்தர்களும் வந்திருந்தனர். திராவிடநாட்டுத் தலைவர் பெரியார் அவர்களும், பழய கோட்டைஇளையபட்டக்காரர்தோழர் N. அர்ஜுனன் அவர்களும் கொட்டகைக்குள் நுழைந்தபோது பெரியார் வாழ்க! அண்ணாத்துரை வாழ்க! திராவிடநாடு திராவிடருக்கே என்ற ஆரவாரம் செய்யப்பட்டது.

நாடகமுடிவில், தலைமைவகித்த தோழர் N. அர்ஜுனன் அவர்களுக்கும், பெரியார் அவர்களுக்கும்செயலாளர்கள், மலர் மாலைகளை அணிவித்து மேடைக்கு அழைத்துவந்தனர். தோழர் N. அர்ஜுனன் அவர்களும், பெரியார் அவர்களும் சொற்பொழிவாற்றுகையில் இந் நாடகத்தைக்கண்டுகளித்த அனைவரும் திருவாரூரைத் திராவிடர் கோட்டையாக ஆக்க முற்படவேண்டுமென்றும், சினிமா, நாடக மணிகளான நமது நகைச்சுவை அரசு தோழர் N.S. கிருஷ்ணன், இசைச்செல்வர் M. K. தியாகராஜபாகவதர், நடிக மணி M. R. ராதா, இசை அரசு தேசிகர், நாடக ஆசிரியர் பொன்னுசாமிப் பிள்ளை போன்றவர்களும், இவ்வித சீர்திருத்த நாடகங்களை இன்னும் அதிகமாக நடத்தமுன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டனர்.

பின்னர் தோழர், ஆறுமுகநாடார் அவர்களால் "சர் பன்னீர் செல்வம்" அவர்களின் வெள்ளி உருவச் சிலையும், தோழர் நமச்சிவாயம் அவர்களால் ஒரு வெள்ளிக்கோப்பையும், நடிகமணி தோழர் M. R. ராதா அவர்களால் தங்க மோதிரமும், நாகை மணி பகுத்தறிவுக் கழகத்தினரால் ஒருவெள்ளிக்கோப்பையும், தோழர் ஆறுமுகநாடார்புதல்வியால் 101 காலணாக்களும் தோழர் C N. A. அவர்களுக்குப் பரிசுகளாக வழங்கப்பட்டன.

திருவாரூர்த்தோழர்களால்வேலைக்கார வீராசாமியாக நடித்த தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு வெள்ளிக்கோப்பை பரிசளிக்கப்பட்டது.

தலைமை வகித்த தோழர் N. அர்ஜுனன் அவர்களுக்கும், தலைவர் பெரியார் அவர்களுக்கும், C. N. A. அவர்களுக்கும் வாழ்த்துப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன.

நாடகத்திற்காக நன்கொடையாகவும் டிக்கட் விற்பனைமூலமும் வசூலான தொகை ரூபா. 3600—இதில் செலவு ரூபா. 1600-போக மிச்சம் ரூ. 2000-த்தில் உள்ளூர்ச் சுயமரியாதைச் சங்கத்திற்கும் பெரியார் வாசகசாலை வளர்ச்சிக்குமாக ரூபா. 1000-நாடகக்கமிட்டியினரால் ஒதுக்கப்பட்டது போக ரூபா 1000-"திராவிடநாடு" பத்திரிகை வளர்ச்சிக்காகத் தோழர் அண்ணாத்துரை அவர்களிடம் கொடுக்கப்பட்டதில் தோழர் அண்ணாத்துரை அவர்கள் மேற்படி இரு சங்கங்களின் வளர்ச்சிக்காக ரூபா. 500 தோழர் ஆறுமுக நாடார் அவர்களிடம் திருப்பிக்கொடுத்தார்.

கடைசியாகத்தோழர் C.N. A. அவர்கள், தோழர்கள் ஆறுமுக நாடார், ஜம்புலிங்கம், இராசகோபால், இரங்கராஜு முதலானவர்களுக்கும், அவர்களுடன் ஒத்துழைத்த தோழர்களுக்கும், நடிகர்கள் தங்குவதற்குத் தமது மாளிகையைத் தந்துதவிய தோழர் குப்புச்சாமி அவர்களுக்கும், பரிசுகள் வழங்கின அனைவருக்கும் நன்றிகூறி, நாடகத்திற்கு பொது மக்கள்காட்டிய பேராதரவிற்கும் காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினர் சார்பாகவணக்கத்தைச்செலுத்திச்சொற்பொழிவாற்றினார். காலை 4-30 மணிக்கு நாடகவிழா இனிது முடிவுற்றது.

## நீத்தார் கடன்.

செங்கம் தாலுக்கா தண்டராம்பட்டு கிராமத்திலிருக்கும் திரு. சித்தாரெட்டியார் அவர்களின் தந்தை பாலகுருவா ரெட்டியார் இறந்ததை முன்னிட்டு 13—8—44ல் இறுதிச்சடங்கு பார்ப்பனப்புரோகிதமின்றி நடத்தப்பட்டது. பகலில் ஓர் பொதுக்கூட்டம் டாக்டர் திரு. S. காந்திமதிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் திருவாளர்கள். M. P. இரங்கசாமி ரெட்டியார், R. S. நடேசமுதலியார், நாமதேவ் ரெட்டியார் முதலானவர்கள் "சமூக சீர்திருத்தமும்—புரோகிதஒழிப்பும்" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தோழர். திருமலை ரெட்டியார் அவர்களால் புரோகிதஒழிப்புப்பாடல் பாடப்பட்டது. திரு. சித்தா ரெட்டியார் அவர்கள் வந்தனோபசாரம் கூறி "குடிஅரசு" "திராவிடநாடு" பத்திரிகையின் வளர்ச்சிக்காக நன்கொடை ரூபாய் ஐந்துவீதம்கொடுத்ததை (M. O. மூலம் அனுப்பப்பட்டது.)

## இறுதிச் சடங்கு

8—8—44 செவ்வாய்க்கிழமை காலை 10-மணிக்கு, கும்பகோணத்திற்குஅடுத்த கொருக்கை வில்வராயநல்லூர், கிராமத்தில் காலஞ்சென்ற S. குழந்தைவேலு உடையார் சமாதி நிலையத்தில் இறுதிக்கடன் தோழர் K, K. நீலமேகம் தலைமையில் V. சின்னதம்பி. K நடேசன் சிங்காரவேல் உடையார், அருணாசல உடையார், இவர்கள் பேசியபின் பகல் உணவு சமபந்தி சாப்பாட்டுடன் கூட்டம் முடிந்தது. குடிஅரசு திராவிடநாடு இரு இதழ்களின் வளர்ச்சிக்காக, முறையே 3 ரூபாய் (மூன்று) நன்கொடை அளிக்கப்பட்டது.

# இது நல்லசமயம்.

பண்ருட்டி, B. வெங்கடசுப்பு.

உலகமே நாகரிகம் அடைந்திராத அந்தக்காலத்தில் (சுமார் 5000 ஆண்டுகட்கு முன்னர்) திராவிடர்கள் எவ்வளவு நாகரிகத்தை அடைந்திருந்தனர். நினைக்க முடியாத அவ்வளவு சிறந்த நாகரிகத்தை அடைந்திருந்தனர். தற்பொழுதுசிந்துநதி தீரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மஹஞ்சதாரோ, ஹாரப்பா என்ற நகரங்கள் திராவிடர்கள் முன்பு அடைந்திருந்த நாகரிகத்திற்குச் சான்று கூறுகின்றன.

அங்கே இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட நகரங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட சீல்களென்ன, கல்வெட்டுகளென்ன, ஆபரணங்களென்ன; எவ்வளவு முன்னேற்றம் எவ்வளவு நாகரிகம்!

உலகத்தில் முதல் முதலில் சிறந்த நாகரிகத்தை அடைந்தவர்கள் திராவிடர்கள் என்பது இதன்மூலம் விளங்குகின்றது. இவ்வளவு சிறந்த நாகரிகத்தோடுவாழ்ந்த திராவிடன்தான் இன்று இப்பார்ப்பனிய அடிமைத்தளையில் சிக்குற்றுத் தவிக்கிறான்.

ஒரு குயில் மொழியாள்! அவள் கண்ணாடிக்கன்னங்கள் என்ன? மனிதனை மயக்கும் கருவிழிகளென்ன? கருநாகத்தைஒத்த அடர்ந்த கூந்தல்தானென்ன! இத்தன்மையையுடைய அவளைக் கண்டு ஆடவன் மயங்குகிறான். ஆனால்அவளிடத்தில் உள்ள நோயை அவன் அறிந்தானோ! இல்லை.

அதுபோன்று வெளிவேடத்தால் நம்மை மயக்கி நம்பணத்தைப்பறிக்கும் ஆரியத்தின் அட்டூழியத்தை நாம் உணர்ந்தோமில்லை.

மத்திய ஆசியாவில் பிழைக்க வழி தெரியாமல் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு இந்தியாவிற்குவந்து, பிழைத்ததுமன்றித், திராவிடர்களைத் தங்கள் அடிமையாகவும் செய்துகொண்டனர். திராவிடர்களின் அறிவாகிய விளக்கை அவித்து இருள்சூழும்படி செய்தனர். ஆனால் அவ்விளக்கைப் புத்தறிவுச்சிற்பி, ஒப்பற்ற நம் தலைவர், பெரியார் ஏற்றி வைத்துத் திராவிடர்கள் உள்ளத்தில் ஒளியை உண்டாக்கினார். இப்பொழுது திராவிடர்கள் வீறுகொண்டுஎழும்பி விட்டனர். இனிப்பார்ப்பனியம் பயந்தோட வேண்டியதே.

பார்ப்பனியத்தின் பெயரால் இன்று நாம் செலவழிக்கும் பணம் கணக்கிலடங்கா. இப்பணம் செலவு செய்ய வேண்டியது அவசியந்தானா? இன்னும் எவ்வளவு காலம் இதுபோல் செலவழிக்கப்போகின்றீர். நாளைக்குக் குடிக்கக்

(6-ம் பக்கம் பார்க்க)

# இது நல்ல சமயம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

கஞ்சியில்லாத ஏழையும், பணம் கடன் வாங்கியாவது பார்ப்பனியத்திற்குச்செலவிடுகிறான். இதுதகுமோ; என்று இப்பார்ப்பனியத்தின் பெயரால் செலவிடும் பணம் நிற்குமோ அன்றுதான் திராவிடர்களாகிய நாம்ஆரிய அடிமைத்தளையினின்றுவிடுதலை பெறுவோம்.

இளம் நெற்கதிர், தென்றலில் மெல்லென-அசைந்தாடுகின்றது, ஆனால் அதில் ஒரு மந்தைமாடுகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. பயிரைக்காப்பாற்ற முதலில் மாடுகளை வெளியில் ஒட்டவேண்டும், பிறகு மாடுகள் உள்ளே வாராதபடி வேலியிடவேண்டும்.

மேற்சொன்னதுபோல் நம் திராவிடரிடையே பரவிவந்துள்ள ஆரியநஞ்சை ஒழிக்கவேண்டும். பிறகு இனஅரசுக்கான வழியைத் தேடவேண்டும்.

இன அரசு கிடைத்தவுடன் பார்ப்பனியத்தின் ஆதிக்கம் அழியும்.

இலக்கியத்தின் இன்பத்தை அனுபவிக்கவும், கலையின் நுணுக்கத்தை அறியவும், ஆத்மவிசாரணை நடத்தவும், நமக்கு இது சமயமல்ல. ஆரியநச்சரவை ஒழிக்கவே இது நல்லசமயம்.

இனிநாம் செய்யவேண்டுவன எவ்வளவோ உள. இன அரசுக்கான முயற்சியில் ஈடுபடவேண்டும். பார்ப்பனியத்தைப்பயந்தோடச் செய்ய வேண்டும். ஆரிய நஞ்சு நம்மிடையே பரவாமல் அழிக்கவேண்டும். பார்ப்பனியம் என்ற அடிமைத்தளையில் இன்று திராவிடன் சிக்கியுள்ளான். அவ்வடிமைத்தளையை அறுத்தெறியமுயற்சிக்கவேண்டும்.

—

# வாலிபர்களுக்கு.

3-ம் பக்கத்தொடர்ச்சி.

நமது மதகர்த்தாக்கள் சிறிது நோயுற்றால் இங்கிலீஷ் நர்சு வைத்தியம் தேடுவதையே பார்க்கிறோம். எல்லா நாடகக்காரர்களும் இராத்திரி வேடம் போட்டு அபிநயித்து ஆடிப் பகலில் வேடத்தைக் கலைத்து விடுவார்கள். நமது மத கர்த்தாக்கள் பகலில் வேடம் போட்டு, அபிநயித்து ஆடி, இராத்திரியில் வேடத்தைக் கலைத்து விடுகிறார்கள். மற்றவர்களுக்குச், சீவனத்திற்காச் சில்லரை வேடங்கள் போட்டு ஆடியே தீரவேண்டுமென்ற நிலையில் மதம் இருக்கிறது. வாதமிடும் சமயநெறிக்கு அறியாமல், மௌனத்தோர்பால் நின்ற சோதியே என்றது சமயம். மௌனத்தோர் பற்றுதலைவிட்டவர்கள், அவர்களிடம்தான் சமயம் வாழும்.

இங்ஙனம்,

**கைவல்யம்.**

# இக்கனகவிசயர்.

8ம் பக்கத் தொடர்ச்சி.

போராட்டத்திற்குஎன்பதை உணராமல். நாம் கேட்கிறோம், இராமநாதன் உரையில், நம்மைப்பற்றிய பகுதியில் எது தவறு? உரைக்கமுடியுமா எக்ஸ்பிரசால்?

வடநாட்டில் இந்து-முஸ்லிம் பிணக்கு முதிர்ந்து நிற்கிறது. அதுவேபோல்தென்னாட்டில் ஆரியர் திராவிடர்உணர்ச்சி துறைதோறும் பரவிவிட்டது என்று கூறினாரே, அது தவறா? அரசியல் துறையில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் நெருக்கடி ஏற்பட்டது அண்மைக்காலத்தில் என்றாலும், அதன் அடிப்படை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே அமைந்துவிட்டது என்றுரைத்தாரே அது வரலாறு புகட்டும் பாடம்தானே? இந்நாட்டுப் பெருங்குடிமக்கள் பொருளாதாரத்துறையில் தாழ்த்தப்பட்டுவிட்டார்கள். அதனுடன் வடநாட்டார் சுரண்டுதலும்சேர்ந்துவிட்டது நம் உள்ளத்தை உறுத்துகிறது. ஆகவேதான் தனித்திராவிடம்கேட்கப்படுகிறது என்றுரைத்த சொல்உண்மையல்லவா? கைப்பிடி அளவுள்ள ஒரு சிறுஇனம் அதிகாரமண்டலம் முழுவதும் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியதுகண்டு தமிழ்மக்கள்உள்ளம் கொதித்துக்குமுறுகிறது என்றாரே, பொய்யா? தெலுங்கன்-தமிழன் பிணக்கெல்லாம், தமது செல்வாக்கை நிலைநிறுத்த "அந்தக்கூட்டம்" மூட்டிவிட்டதுதான் என்று நவின்றாரே, அதுஉண்டா, இல்லையா? இவ்வளவும் உண்மைதானே!

உண்மையானால் எக்ஸ்பிரசின் சீற்றத்திற்குக்காரணம் வேறென்னஇருக்க முடியும், தமது இனஆதிக்கம் அசைந்து கொடுக்கிறதே என்பதைத்தவிர? ஆனால் ஒன்று உரைப்போம் "தினசரி"களும் "எக்ஸ்பிரஸ்"களும் தலைதெறிக்கப்பேசினாலும் திராவிடம் தனிநாடாவதுஉறுதி. இன்றில்லையேல் நாளை, **இக்கனக விசயர் பரம்பரை இன்றையசேரன் செங்குட்டுவர்களிடம் சரண்அடைவதும் உறுதி.** அந்நாளிலே இன்றுபோல, வடநாட்டு மார்வாடி தமிழ்நாட்டுச் சென்னையில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் என ஒன்றுக்கு மூன்று தினசரிநடத்தும் அறக்கொடுஞ்செயல் இராது, நிச்சயமாய் இராது. அதை உணரட்டும் ஆரியம், உணர்த்தட்டும் தமிழகம்.

## திராவிடஸ்தான் வேண்டும்.

இம்மாதம் 15-ந் தேதி சென்னை இராயபுரம் மாதாகோயில் மைதானத்தில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டத்தில்காங்கிரஸ் சோசியலிஸ்டுகள் திராவிடநாட்டுப் பிரிவினையைக் கண்டிக்கவே தொழிலாளர் தோழர்கள் கேள்விகள் கேட்டுக் கிளர்ச்சிசெய்தனர் அவர்கள் ஓட்டம் பிடித்தனர். பின்னர் தோழர் N. ஜீவரத்தினம் திராவிடஸ்தான் அவசியத்தைப்பற்றிப் பேசினார்.

# திறப்பு விழா.

நிகழும் ஆடித்திங்கள் 21-ம் நாள் 5—8—44 சனிக்கிழமையன்று மாலை 7-மணிக்கு பலபுலவர்கள் மாணவ மாணவிகள் முதலியவர்கள் உள்ள மாபெருங்கூட்டத்தில், நகராண்மைக்கழகநாடகப் பொது மண்டபத்தில் திருச்சி நகரசிபைக் கண்காணிப்பாளர் உயர் திரு. D. பாலசுந்தரம் B. A. அவர்கள் தலைமையில் தஞ்சை கரந்தைப் புலவர் கல்லூரித்தலைவர் பண்டிதர் உயர் திரு. P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை. M. A. அவர்களால் இலக்கியமும் இளைஞரும் என்றும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவாற்றித் தமிழ்நலமே பெருநோக்கமாகக் கொண்டு தென்னிந்திய இருப்புப்பாதை அலுவலகத்திலுள்ள எழுத்தாளரிடை எழுந்துள்ள "ஞாயிறு இலக்கியக் கழக'த்தையும் திறந்து வைத்தார். திரு. வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் கழகத்தலைவர் திருவாளர். T. S. சிவப்ரகாசம் அவர்களின் விருந்தாளியாக இருந்தார்.

## பொதுக்கூட்டம்.

11—8—44மாலை 6மணிக்கு மைசூர்சிவராம்பேட்டையில் கோயம்புத்தூர் ஜில்லா தமிழ்வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் M. இராமசாமிப்பண்டாரம்அவர்கள் தலைமையில் சென்னை (சித்த) வைத்திய சங்க அமைச்சர் திரு. பண்டித S. S. ஆனந்தம் அவர்களால் தமிழர் சமயமும் வாழ்க்கையும் என்பதைப்பற்றியும், மக்கள் நோயின்றி உடல் உரத்துடன் நெடுநாள் வாழ்வதற்கான வழியைப்பற்றியும் மூன்றுமணி நேரம் விரிவுரைசெய்யப்பட்டது. அவ்வமயம் வர்த்தக சங்கத்தினர்களும், அன்பர்களும் குழுமியிருந்தனர். விரிவுரையில் பண்டைக்காலத் தமிழர் சமயநெறியும், தற்காலமாறுதல் அடைந்துள்ளதையும் சமய திருத்தம் வேண்டுவதைப்பற்றியும், தமிழரின் கைத்தொழில், பயிர்த்தொழில் வாணிபம், ஓவியம் இசை தமிழ் வளர்த்தசங்கம் தமிழரின் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, தமிழரின் உணவுபாகம், சமையல்பாகம் இயற்கை வைத்தியம் முதலிய பொருள்கள் மிகப்போற்றுதற்குரியதாயிருந்தன. சங்கச்செயலாளரால் நன்றிகூறக்கூட்டம் இனிது கலைந்தது. இக்கூட்டத்தை நடத்துவதற்கு திரு A.S. சுப்பிரமணியஞ் செட்டியார் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டுத்குரியதாகும்.

## விளம்பரம்

நம் சொந்த வேலைகளில் ஒரு வேலைக்கும் பார்ப்பனர் கூடாது. சர்க்கார்வேலை கோவில் வேலை, ஒருவேலைக்கும் பார்ப்பனர் கூடாது என்று சட்டம் செய்ய வேண்டும்.

**ஆ. ஸி. கோவிந்தராஜ்,**
எம். ஏ. பி. எல்., அட்வகேட்,
பழைய தாம்பரம்.

# அடிமை மக்கள் விடுதலை.

*தஞ்சைத் திராவிட வாலிபர் கழகத் திறப்புவிழாவிலும் தஞ்சை மாவட்ட மருத்துவர் மாநாட்டிலும் கரந்தைப் புலவர் கோ. சி. பெரியசாமி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு.*

தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலையை விரும்பினால் எதிர்ப்பு எங்கும் எந்நாட்டிலும் ஏற்படுவதையும், நாளடைவில் அவ்வெதிர்ப்புக்குரிய வலிகுறைந்து அடிமையுற்ற மக்கள் விடுதலையடைவதையும் யாம் பலநாட்டு வரலாறுகளாலும் அறிகின்றோம்.

யான் இம்மாநாட்டிற் கலந்துகொண்டமைக்குரிய காரணத்தை முதலில் விளக்க விரும்புகிறேன். யான் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் மாணவனாகக் கல்விபயின்று கொண்டிருந்த காலத்தில் (சுமார் 1934ல்) தில்லையில் உள்ள நந்தனார் கல்விக்கழகத்தை நிறுவியவராகிய தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்சுவாமி A. S. சகஜாநந்தருடன் தொடர்பு கொண்டு ஆதித்திராவிட மக்கட்குஎன்னாலியன்ற பணிகளை அவர்கள் விருப்பின் வண்ணம் செய்துவந்தேன். ஒருநாள் கள்ளக்குறிச்சிப் பக்கத்திலிருந்து வந்த நாராயணசாமி ஐயர் என்பவர் சுவாமி சகஜாநந்தரிடம் வந்து மகாத்துமா காந்தியவர்கள், ஆதித் திராவிடர்கள் ஆலயப் பிரவேசம் வேண்டுமென ஓர் ஊர்வலமாகத்திரண்டு வந்து தங்கள் விருப்பினை வெளியிடச் சொல்லி அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். தாங்கள் நாளைக் காலையில் உங்கள் கல்விக் கழக மாணவர்களைக் கூட்டிக்கொண்டு ஊர்வலம் வரவேண்டும்- யானும் வருகின்றேன் என்று கூறினார். சுவாமி சகஜாநந்தரும் அவர் வேண்டுகோட் கிணங்கி மறுநாட் காலையில் மாணவர்களையெல்லாம் கூப்பிட்டு நீரில் மூழ்கித் தூய்மையுடன் சிவ சின்னங்களை அணிந்து கொண்டு தேவார திருவாசகம் முதலிய தெய்வப்பாடல்களைப் பாடிக் கொண்டு ஊர்வலம் வர ஆணையிட்டனர். யான் ஊர்வலம் வேண்டாமென முதலிற் கூறினேன். அவர் கேளாததால் அவர்பாலுள்ள அன்பின் காரணமாக யானும் அவ்வூர் வலத்திற் கலந்துகொண்டு தில்லை வீதியில் ஊர்வலம் வந்தோம். மாணவர்கள் திருநீறு பூசிக்கொண்டு சிவ சின்னமணிந்து தேவாரப் பண்களை இனிமையுடன் பாடி வந்தனர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களும் ஊர்வலத்திற் கலந்து கொண்டனர். அவ்வூர்வலம் கீழவாயில் அடைந்ததும் அங்கு தீக்கதர்களால் கூட்டிவைக்கப்பட்டிருந்த ஒரு கூட்டத்தார் பெருவழியில் வழியைச் சீர்படுத்தக் கொட்டிக் கிடந்த கருங்கற்சல்லிகளைக் கையில் அள்ளிக் கொண்டு தேவார மோதும் மாணவர்கள் மீதும் எங்கள் மீதும் வீசினார்கள். கல்மழைக்குப் பயந்த யாங்கள் எங்களுடன் வந்த இரட்டை மாட்டு வண்டியில் ஏறி அவ்வண்டிக் கூண்டே பாதுகாவலாக ஒளிந்தோம். அவ்வண்டியில் யானும், சுவாமி சகஜாநந்தரும், புவனகிரி சிங்காரவேல் சுவாமியவர்களும் ஆக மூவருமிருப்பதைக்கண்ட அக்கூட்டத்தார் எங்கள் வண்டியை நோக்கிக் கல்மழை பொழிந்தனர். எங்கள் வண்டிக்குள் கற்கள் சிதறி வந்தன. எங்கள்மீதும் அடிபட்டன. நிறைந்த அடிவிழுந்து யாங்கள் அவ்விடத்திலேயே மாண்டொழியாமல் அக்கல்மழையினின்றும் ஆதித்திராவிட மாணவர்கள் எங்களைக்காப்பாற்றினர். மாட்டு வண்டியின் முன்பக்கம் பின்பக்கம் அவர்கள் ஏறி நின்றுகொண்டு தங்கள் முதுகுகளைக் கொடியோர்களின் கல்லடிக் கிலக்காக்கி எங்களைக் காப்பாற்றினர். இக்கல்லடி விழா நடந்த மறுநாள் மாலையில் யான் எனது நண்பர் செம்பங்குப்பம் கோபால்சாமி நாடார் அவர்கள் கீழவாயிலில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தாராதலின் அவரிடமுள்ள பாடநூல் ஒன்றினை வாங்கிவரக் கீழவாயிற் பக்கம் போனேன். அங்கு ஒரு யானைக்கால் தீக்கதன் "இவன்தான் நேற்று ஆதித் திராவிடர்களை அழைத்துக் கொண்டு கோயிற்குள் நுழைய முயற்சித்தவன்" என்று கத்தினான். அவன் கத்தியதைக் கண்டு ஆங்கிருந்த அடிமைகள்- இரவில் அவனிடம் உண்டைக்கட்டி பெறுபவர்கள் பலர் என்மீது முதல் நாளே போன்று கல்லை எடுத்து வீசி எறிந்தனர். அவர்களில் ஒருவன் இடையிலுள்ள வாரை அவ்விழ்த்துக் கொண்டு என்மீது வீசினான்: அவர்கள் வீசி எறிந்த கற்கள் உடம்பின் பலவிடங்களிற்பட்டு இரத்தம் பீறிட்டுக்கொண்டு கிளம்பின. இக்காட்சியைக் கண்டு பொறுக்காத வித்துவான் பட்டம் பெற்ற குஞ்சிதபாத தீக்கதர் என்னும் இரக்கமுடைய நண்பர் ஒருவர் குறுக்கிட்டுத் தடைசெய்து யான் இறந்துபடாமற் காப்பாற்றினார். அவரிலராயின் அக்கல்லடி பட்டு யான் இறந்துபட்டிருப்பேன். அவர்கள் எறிந்த கற்களாலான புண்களை இன்று இம்மாநாட்டுக்கொடியை ஏற்றிய டாக்டர் நாகப்பா அவர்கள் மருந்திட்டு ஆற்றினார். புண்களை ஆற்றிய இப்புண்ணியரைக் காணவும் மாநாட்டிற் சொற்பொழி வாற்றவும் பேறு கிடைத்தால் யான் இப்பேற்றை இழப்பேனோ?

எந்நாட்டிலும் அடிமைமக்கள் விடுதலை வேண்டின் அந்நாட்டில் அம்மக்களை அடக்கி ஒடுக்கி ஆண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியவர்கள் எதிர்த்தே வந்திருக்கின்றனரென நமக்குவரலாற்று நூல்கள் அறிவிக்கின்றன. இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி தோன்றியது. இக்கட்சியை நாட்டியவர் ஜனாதிபதி "சபர்சன்" ஆவர். முதலாளிகளால் தொடங்கப்பெற்று முதலாளித்துவத்துக்கு எதிராகத் தோன்றியது இக்கட்சியேயாகும். எல்லோருக்கும் சம உரிமை; சிறப்புரிமையாருக்கும் கிடையாதென்ற கொள்கை இக்கட்சியின் கொள்கையாகும். 1850-ல் அமெரிக்காவில் நடைமுறையில் வழங்கி வந்த அடிமை வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று வீரமுழக்கம் எழுப்பி எல்லோருக்கும் உரிமை வழங்க வேண்டுமென்ற கொள்கையின்மேல் எழுந்தது குடியரசுக்கட்சி. இக்கட்சியின் கொள்கைகளைக் குறித்து, அமெரிக்கரவிலுள்ள வடபகுதியினருக்கும், தென்பகுதியினருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. வடபகுதியினர் அடிமை வழக்கத்தை ஒழிக்கவேண்டுமென்றனர். தென்பகுதியினர் இவ்வடிமை வழக்கம் தம்நாட்டின் உரிமை என்றனர். வடக்கேயுள்ள ஜனநாயகக் கட்சியினர், அடிமை ஒழிப்பை ஆதரிக்கும் விரிந்த நோக்க முடையவர்களாய் வடபகுதியிலுள்ளோருடனும் பிறருடனும் இயைந்து நின்று குடியரசுக் கட்சியை நாட்டினர், இக்கட்சிதான் 1860-ல் உலகெங்கும் புகழ்பெற்ற "ஆபிரகாம் லிங்கனை" ஜனாதிபதியாகத் தேர்தெடுத்தது. இதனைக்கண்ட தென்பகுதியினர் அடிமையொழிக்கும் கட்சியினர் அமெரிக்கத் தலைமைப்பதவிஏற்றதைக் கண்டு பொறுக்காது அமெரிக்கக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்துவிடுகின்றோமென்று கிளர்ச்சி புரிந்தனர். ஆபிரகாம் லிங்கனும் குடியரசுக்கட்சியினரும் இங்ஙனம் துண்டித்துக்கொண்டு போகக் கூடாதென்றனர். இதன் விளைவாகச் சுமார் ஐந்து யாண்டுகள் அமெரிக்காவில் பெரிய உள்நாட்டுக் கலகம் நிகழ்ந்தது. இப்போரில் அடிமை வழக்கத்தைஆதரிக்கும் தென்பாகத்தார் தோற்றனர். அமெரிக்கக்கூட்டாட்சியும் நிலைநாட்டப் பெற்றது. இவ்வாலாறு, (இச்சரித்திரம்) நமக்கு உணர்த்துவதென்ன? மக்களை அடிமைப்படுத்த எண்ணுவோர் கடைசியில் தோல்வியுறுவர் என்பதேயாம்.

—— (தொடரும்(

## பிறப்பு

தூத்துக்குடி தென்னிந்திய நலஉரிமைச் சங்கச் செயலாளர். M. S. சிவசாமியின் துணைவியார். இராஜாம்பாளுக்கு ஜூன் 22உ ஓர் ஆண்மகவு பிறந்து சிவராஜரூபன் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

## வீரவாள்!

3ம் பக்கத் தொடர்ச்சி.

அதை ஆதரிக்கும் கூட்டம், அப்புராணங்களிலுள்ள கதைகளை நேரில் கண்டவர் போல் எழுதி மக்களிடையே பரப்பும் எழுத்தாளர்களின் ஜாலமும் இனி இத் தமிழ் நாட்டில்தலைதூக்கிவாழ முடியாது, வீறுகொண்டு கிளம்பித் தமிழகத்தைப்பாழ் படுத்தவேண்டாம், பலனொன்றும் காணமாட்டீர். தமிழ்நாடு போதையில் மயங்கிய மக்களை தட்டிஎழுப்பி விட்டது. சிறந்த தலைவர்களையும் பெற்றுவிட்டது. தன்மதிப்பியக்கத் தந்தையான சுயமரியாதைச்சுடர்நமது பெரியார் பொழிந்த ஆற்றல் நம்தமிழரை வீரர்களாக்கிவிட்டது, இருளடைந்த உள்ளம் ஒளிகொண்டது, மறைந்த தமிழர்வாழ்வு மறுபடியும் சிறந்தோங்கச் செய்தது, நாடு மக்களின் ஒற்றுமையை நாடிநிற்கிறது, ஆரியநாகம் அலறுகிறது. ஆண்மைகொண்டார்கள் தமிழ்மக்கள், தர்ப்பைப்புல்லின் தர்பார் இனிநடவாதுஎன்று தவிக்கிறது ஆரியம். வீரத்தமிழர்களே, வீரவாளைக் கையில் பிடியுங்கள், வெல்வோம் ஆரியத்தை! வீழ்த்துவோம் வைதிக வஞ்சனைக்காரர்களை! கட்டுக்கதைகள் காய்க்கும் விஷக்கனிமரத்தை வேரோடு பெயர்த்தெறிவோம் என்று முழக்கமிடுங்கள், வெற்றி நமதே!!

---

## தமிழ்நாட்டில் ஆரிய ஆதிக்கமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

நடத்துகின்றார்கள். எங்கள் அரசர்கள் கட்டிய கோயிலின் செல்வங்களால் வளமாக வாழுகின்றார்கள்.எங்களைத்தாழ்த்துகின்றார்கள். சொத்தது தமிழர்களது, அதன் பயனை அனுபவிப்பவர்கள் பார்ப்பனர்கள். ஆதலால் ஆரியமே! எங்கள் நாட்டில் இருந்ததுபோதும், எங்கள் நாட்டைவிட்டுச்செல்லுங்கள். மானத்தை செல்வத்தை அபகரிக்கும் அனுசாரங்கள் எங்களுக்கு வேண்டாம். போதும் ஆரிய ஆதிக்கம் நம்மை ஆட்சிசெலுத்தியது.

தமிழா! "தமிழ்நாட்டில் ஆரிய ஆதிக்கமா? என்று முரசுகொட்டு!' ஆரிய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிவேன் எனமுழக்கம் செய்!?

வாழ்க! வளமார் எமது திராவிட நாடு"

---

# இக்கனகவிசயர் பரம்பரை.

**மா. குமாரசாமி.**

"பாகிஸ்தான் வேட்கையே அறிவுக்கும் பொருந்தாதது; ஆராய்ச்சிக்கும் ஒவ்வாதது என்று நடுநிலையாளர்கள் நவிலுங்கால திராவிடநாட்டுப் பிரிவினை என்பதெல்லாம் பித்தமுதிர்ச்சியன்றி வேறென்னே?" என்று கேட்கிறது சென்னைத் தினசரி இந்தியன் எக்ஸ்பிரஸ் சென்றகிழமை. ஆம், தட்டிக்கேட்க ஆளில்லை என்ற தவறியநினைப்பு, நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமுமின்றி அஞ்சிவாழுந்தமிழர் சிலர்இன்னமும் தமிழகத்தில் நடமாடுகின்றனர் என்ற தைரியம், திராவிட இனமானத்திற்குஇழுக்குத் தேடும் சழக்கர்கள் சிற்சிலரேனும் உள்ளனரே தமிழ்க்குலத்தில் என்ற மனப்பான்மை, பார்ப்பனர்பிடி சமயசமுதாயத்துறைகளில் அழுத்தர் திருத்தமாகவே உள்ளதுஎன்ற ஆணவம்-இவைதாம்எக்ஸ்பிரஸ் 18—8—44 தலையங்கத்தின் எழுத்து, சொல், சொற்றொடர்கள். திராவிடநாட்டுப் பிரிவினைமுரசு இன்று திக்கெட்டும் ஒலிக்கத்தொடங்கிவிட்டது. ஆரியவட்டாரத்தில் அதுகிளப்பிய எதிரொலியே எக்ஸ்பிரஸ் தலையங்கம். திராவிடக் குடிஅரசு அமைத்தே தீருவோம் என்று தலைவர் பெரியார் ஆறுஆண்டுகட்கு முன்னர் துவக்கிய பெருமுழக்கம் இன்று தமிழகமெங்கணும் பரவிப்பெருகுகின்றது. அதுகண்டுஅந்த "முகத்துதித்தோர்" அஞ்சுகின்றனர். அந்த அச்சத்தின் உருவகமே எக்ஸ்பிரசின் தலையங்கம். தரணி ஆளுவோம் பரணி பாடுவீர் என்று நம் அருமைத் தளபதி "அண்ணு" வின் பேனுமுனை அன்று கூவிஅழைத்தது தமிழகத்தை. பார்க்கின்றோம் அதன் விளைவாய் ஆரிய வட்டாரத்தில் அவதிக்குரல் எழும்பிவிட்டதை. அந்த அவதிக் குரலே எக்ஸ்பிரசின் தலையங்கம்.

எக்ஸ்பிரசின் சீற்றம் திடுமெனஎழுந்ததற்குக்காரணம் இது.

அண்மையில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், என்ஜினீரிங் கல்லூரியில் மற்ற இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தியஞான்று, முன்னாள் அமைச்சர் தோழர் இராமநாதன் அவர்கள் தெளிவாக எடுத்துவிளக்கினார் இந்து-முஸ்லிம் சிக்கல் எவ்வளவு முதன்மையோ வடநாட்டில், அவ்வளவு முதன்மை பார்ப்பனர்-அல்லாதார் பிணக்குத் தென்னாட்டில் என்பதை. "ஆச்சாரியார் வகுத்துள்ள அரசியல்திட்டம் முடிந்த முடிபுமல்ல, எல்லோருக்கும் நீதி வழங்குவதுமல்ல. தென்னாட்டுத்திராவிடர் பிரச்சினை அதில் இடம்பெறவேஇல்லை. ஆகவே அதுதிருத்தி அமைக்கப்படவேண்டுவதுதான்" என்று எடுத்துக்காட்டினார் முன்னைய "ரிவோல்ட்" ஆசிரியர். அது வியப்புக்குரியதுமல்ல. அதன்காரணம் பெரிய, பெரியார் கூறுவதுபோலக் கட்டுப்பட்டு கட்டிக்கொண்டு காதல்மிக்க செல்லுகிறது வதுமில்லை. பெருங்காயம்இருந்த பாண்டம், அது எங்கிருந்தாலும் அதன் மணத்தை வீசத்தான்செய்யும். அது இயற்கையுங்கூட, தோழர் இராமநாதன் அவர்கள் தன்மான இயக்கத்தின் இளங்குழவிப் பருவத்தில் அரிய தொண்டாற்றியவர். அந்த நாளைய ரிவோல்டில் அவரது பேனு ஈர்த்தனத்தைக் கண்டவர்கள், இன்றையதினம் பார்ப்பனிய விளைவுகளை அவர் கண்டிப்பதுகண்டு வியப்புறமாட்டார்கள். இத்துணை நாள் எப்படி அவரால் கண்டிக்காமலிருக்க முடிந்தது என்றுதான் வியப்புறுவர். பழமையைச்சாடியும் பண்டிதரைத்தாக்கியும் அவரது எழுத்தும்சொல்லும் அன்று பாய்ந்ததை அறிந்தவர்கட்கு, "இசையில் பண்டிதத்தன்மை மிகுந்துவிட்டது. அதைக்கண்டிப்பதுதான் தமிழிசை இயக்கம்" என்று அவர் இன்றெடுத்துக்காட்டுவதில் வியப்புத்தோன்றஇடமில்லை. இந்தியன் எக்ஸ்பிரஸ்கள் வியக்கக்கூடும். எங்கே இராமநாதன் மீண்டும் சுயமரியாதைச் சூறாவளியில் அகப்பட்டுக்கொள்கிறாரோ என்று அஞ்சவும்கூடும். நமக்கில்லை அந்த வியப்பும் அச்சமும். அவர் மட்டும் இன்னும் சற்றுத்தெளிவாகப் பேசட்டும். அவரை அரசியல் விதவையாக்கிடுவோம் என்று ஆணவத்தோடு உரைக்கிறது எக்ஸ்பிரஸ். அரசியல் மேடையில், எவரைவேண்டுமானாலும் ஏற்றவும் இறக்கவும்கூடும், தம்மினத்தவரால் என்ற பெருமிதத்தில்பேசுகிறது எக்ஸ்பிரஸ், அந்தக்காலம்மலையேறிவிட்டது என்பதைஅறியாமல். இராமநாதன் தன்மானக்கொள்கைகளைக் கைநழுவவிட்டுக் காங்கிரஸ் அமைச்சரானார்; அரசியல் மன்னிப்புப்பெற்றார்என்றல்லவோ எண்ணினோம். ஆனால் அவர் மனப்பாங்கில் எத்தகையமாறுபாடும் காணோமே என்று எக்ஸ்பிரஸ் ஓரிடத்தில் கசிந்து கண்ணீர் மல்குகிறது.பாவம் அந்தத் தலையங்கத்தில் பயமும் நயமும் அச்சமும் ஆணவமும் சதிராடுகின்றன எந்த ஆயுதமாவது வெற்றியைத்தராதா என்ற நினைப்பில்.

திராவிடநாடுகேட்பது சண்டித்தனமாம். அந்தச் சண்டித்தனத்தில் இறங்கிவிட்டாராம் இராமநாதன். தன்னலவாதிகள் இரண்டொருவருடைய கூக்குரலாம் அது. அதற்கு ஒத்துஊதுகிறாராம் இராமநாதன், கூறுகிறது எக்ஸ்பிரஸ், எந்தியவாளுடன் இளந்தமிழர்கள் அணிவகுத்துப் புறப்பட்டுவிட்டார்கள் பிரிவினைப்

(6ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.